# தேசபக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 078 ★20.07.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:078 ★20.07.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai






## விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

செங்குன்றம் அடுத்த நல்லூர் சோலையம்மன் நகர் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம், ராஜலட்சுமி இன்ஸ்டிடிட்யூட் ஆஃப் டெக்னாலஜி ஆகியோர் இணைந்து கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியை பள்ளியின் தாளாளர் டாக்டர் மணிவண்ணன் தலைமையில் நடத்தியது. செயலாளர் ஜெயலட்சுமி வரவேற்றார். முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழி வர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் நண்பன் எம்.முகம்மது அபுபக்கர் அறிமுக உரையாற்றினார்.

பிரபல கல்வியாளர் ஜெயபிரகாஷ் காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மாணவ மாணவிகளிடையே கல்வியின் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் வாழ்வில் எவ்வாறு முன்னேறுவது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்வியில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் எடுத்துரைத்து எந்தெந்த படிப்புகளுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளன என்பதையும் அழகாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் ராஜலட்சுமி இன்ஸ்டிடிட்யூட் ஆஃப் டெக்னாலஜி கார்த்திகேயன், சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க தலைவர் எஸ்.ரமேஷ், செயலாளர் எஸ்.கோபி, தமிழ்சிங்கம் லயன்ஸ் சங்க செயலாளர் டெக்கரேட்டர் பி.சேகர் உள்ளிட்ட மாணவமாணவிகளும், ஆசிரியஆசிரியைகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதில் 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பல்வேறு பாடங்களில் மாணவ மாணவிகள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற உழைத்த ஆசிரிய ஆசிரியைகளை பாராட்டி, பரிசு வழங்கப்பட்டது.

# தமிழகத்தில் ஆட்டோக்களுக்கு பிரத்யேக நம்பர் பிளேட் வழங்க புதிய திட்டம்

## குற்றச்செயல்களை தடுக்க போக்குவரத்துத் துறை அதிரடி

தமிழகம் முழுவதும் விரைவில் பழைய மற்றும் புதிய ஆட்டோக்களுக்கு பிரத்யேக நம்பர் பிளேட் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் பிரதான போக்குவரத்து சேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆட்டோக்கள் இயங்கி வருகின்றன. மோட்டார் வாகனச் சட்டத்தின்படி, ஒவ்வொரு வாகனமும் தெளிவாகக் காணக்கூடிய வகையில் பதிவு எண்ணை காட்சிப்படுத்த வேண்டும்.

இது விபத்து அல்லது குற்றச் சம்பவங்களின் போது வாகனத்தை அடையாளம் காண மிகவும் முக்கியமானதாகும். ஆனால் நம்பர் பிளேட் இல்லாமல் ஏராளமான ஆட்டோக்கள் ஸ்டிக்கர் மட்டும் ஒட்டிக்கொண்டு மாநகரத்தில் உலா வருகின்றன.

இதனால் போக்குவரத்து கண் காணிப்பு கேமராக்கள் எளிதில் பதிவுசெய்ய முடியாத சூழல் உருவாகியுள்ளது.

வாகனப் பதிவெண் தொடர்பாக போக்குவரத்துத் துறை காவல் அதிகாரி கூறும்போது, “கட்டுப்பாட்டை மீறி வேகமாக செல்லுதல், அனுமதியில்லாத இடங்களில் வாகனத்தை நிறுத்துதல், சாலை விதிகளை மீறுதல் போன்ற செயல்களில் ஈடுபடும் ஆட்டோக்கள் மீது அபராதம் விதிக்கப்படுகிறது. ஆர்டிஓ மூலமாக கொடுக்கப்பட்ட ஐ என்டி ஹோலோகிராம் ஸ்டிக்கர் கொண்ட நம்பர் பிளேட்டை அகற்றி விட்டு சாதாரண ஸ்டிக்கர் ஒட்டுவதால் உடனடியாக அந்த ஆட்டோக்களை சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்டறிவதில் சிரமம் ஏற்படுகிறது” என்றார். ஆனால், போதிய அளவில் ஆட்டோக்களுக்கு நம்பர் பிளேட் தரப்படவில்லை என ஆட்டோ ஓட்டுநர்கள் தரப்பில் குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. இதுகுறித்து, ஆட்டோ தொழிற்சங்கப் பிரிவு நிர்வாகி கூறுகையில், “சென்னையில் ஓடும் 1.20 லட்சம் ஆட்டோக்களில் 75% பழைய ஆட்டோக்கள் தான்.

தற்போதுவரை பழைய ஆட்டோக்களுக்கு நம்பர் பிளேட் வழங்கப்படவில்லை.

யாரோ ஒருசிலர் மட்டுமே குற்றச்சம்பங்களில் ஈடுபடுகின்றனர். எங்களின் பிரதான



கோரிக்கையே பழைய வாகனங்களுக்கும் நம்பர் பிளேட் வழங்கப்பட வேண்டும். பர்மிட், ஆவணங்கள் உரிமம் பெறுவது உள்ளிட்டவற்றில் காலதாமதத்தை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

விதி மீறல் வாகனங்கள்: போக்குவரத்து ஆணையரகம் மூலமாக கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் போக்குவரத்து விதிகளை மீறியதாக கார், ஆட்டோ மற்றும் லாரி போன்ற வானகங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது



சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு61க்குப்பட்ட எழும்பூர் மகப்பேறு மருத்துவனைக்கு முன்புறம் உள்ள பாந்தியன் சாலையில், நடைபாதை விற்பனைகடைகள்தடைசெய்யப்பட்டபகுதியில், நடைபாதைபோக்குவரத்திற்கு இடையூறாக இருந்த கடை ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி மற்றும் காவல் அலுவலர்களுடன் அகற்றப்பட்டது.

## ஜவ்வாது மலையில் மக்கள் வெள்ளத்தில் கோலாகலமாகத் துவங்கிய 26வது கோடை விழா:

# "பெண் கல்வியே நாட்டின் வளர்ச்சி; குழந்தை திருமணம் சமுதாயப் பாழ்" என அமைச்சர்கள் ஆதவ் அர்ஜீனா, செ.ராஜேஷ்குமார் எழுச்சி உரை

## கலெக்டர் வந்தனா கார்க், எஸ்.பி. உதயகுமார் முன்னிலையில் ரூ.176 கோடியில் நலத்திட்ட மழை

இயற்கை எழில் கொஞ்சும் திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை சார்பில் 26வது கோடை விழா இன்று (18.07.2026) விண்ணதிரும் மக்கள் கோஷத்துடன், தமிழக வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வகையில் மிக பிரம்மாண்டமாகத் துவங்கியது. ஜமுனாமரத்தூர் வட்டம் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவினை, தமிழகத்தின் ஆற்றல்மிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜீனா அவர்களும், மக்கள் செல்வாக்கு மிக்க சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் அவர்களும் இணைந்து குத்துவிளக்கேற்றி, கோலாகலமாகத் துவக்கி வைத்தனர்.

இவ்விழாவிற்குத் தலைமைப் பொறுப்பேற்று, மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை முன்னின்று நடத்தி வரும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க், சுற்றுலா மற்றும் தொல்லியல் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.அபிஷேக் ஆகியோர் முன்னிலை வகித்து விழாவிற்குப் பெருமை சேர்த்தனர். விழாவைத் துவக்கி வைத்து, ஜவ்வாது மலையே அதிரும் வண்ணம் பேரெழுச்சியுடன் உரையாற்றிய பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் மாண்புமிகு ஆதவ் அர்ஜீனா அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பெண்கள், இளைஞர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வாழ்வாதார முன்னேற்றத்திற்காக விடிவெள்ளியாய் திகழ்ந்து வருகிறார் என்றும், சமூகத்தை சீரழிக்கும் போதை கலாசாரத்தை வேரோடு அறுத்து எறியும் அத்தனை அதிரடி நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், ஒரு மாவட்டத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய அடித்தளம் பெண் கல்வியாகும் என்றும், பெண்களின் கல்வியை மாநிலமெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் உன்னத திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறினார். அத்தகைய பெண் கல்வியை நாம் ஊக்குவிக்கும் போது வீடும் நாடும் அசுர வளர்ச்சி பெறும் எனத் தெரிவித்த அவர், ஜவ்வாது மலையில் வாழ்கின்ற நமது பழங்குடியின மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நிலப் பட்டா வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். மலைவாழ் மக்களின் நலனுக்காக கூடுதல் பள்ளிகள், உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனைகள் மற்றும் இளைஞர்களுக்கான பிரத்யேக திட்டங்கள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும், குறிப்பாக, குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர்கள் என்னும் சமுதாயத்தை பாழாக்கும் செயல்களை முற்றிலும் விலக்கி, அனைத்து குழந்தைகளின் பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வியை இந்த அரசு உறுதி செய்யும் என்றும் சூளுரைத்தார்.

குழந்தை திருமணத்தால் எதிர்கால கனவுகள் உடைந்து அக்குழந்தைகளின் வாழ்க்கை கேள்வி குறியாகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், இதனை அரசு உன்னிப்பாக கவனித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும், திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்களின் உயர் கல்வியோடு வேலைவாய்ப்பையும் உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும், உங்கள் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்றும் அதிரடியாக முழங்கினார்.

இதனைத்தொடர்ந்து விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் அவர்கள், பண்டைய கலாச்சாரத்தின் தொட்டிலாகவும், கிழக்கு தொடர்ச்சி மலையின் மகுடமாகவும் திகழும் இந்த ஜவ்வாது மலையில், தேன், தினை வகைகள், முக்கனிகள் மற்றும் சந்தனம் போன்ற இயற்கை செல்வங்கள் கொட்டிக்கிடக்கின்றன என்றும், இச்சிறப்பு மிக்க மலையில் கோடை விழாவில் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் நெகிழ்ச்சியுடன் பேசினார்.

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதே மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மை நோக்கமாகும் என்று தெரிவித்த அவர்,





அதற்காகவே, சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் சாதனை விளக்கக் கண்காட்சிகள் இங்கு பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

மலைவாழ் மக்களின் குழந்தைகளின் கல்வியை முதற்கண்ணாக நினைத்து இந்த அரசு செயலாற்றி வருகிறது என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி இம்மாவட்டம் வளர்ச்சி பெற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது என்றும் உறுதியளித்தார். விழாவின் முத்தாய்ப்பாக, மாண்புமிகு அமைச்சர்கள் இருவரும் இணைந்து ஒட்டுமொத்த தமிழகமே வியக்கும் வண்ணம் நலத்திட்ட மழையைப் பொழிந்தனர். அதன்படி, ரூ.65.66 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி, வருவாய், பள்ளி கல்வி, அயலகத் தமிழர்கள் நலன் உள்ளிட்ட 06 துறைகளின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 128 மெகா திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அதேபோல், ரூ.111 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை, தாட்கோ உள்ளிட்ட துறைகளின் கீழ் 27,532 பயனாளிகளுக்கு அள்ள அள்ளக் குறையாத அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சாதனை படைத்தனர்.

விழாவைத்தொடர்ந்து, பலாமரத்தூர் கிராமத்திற்கு நேரில் சென்ற அமைச்சர்கள் ஆதவ் அர்ஜீனா மற்றும் செ.ராஜேஷ்குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற "18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகள் திருமணத்திற்கு எதிரான விழிப்புணர்வு" முகாமில் பங்கேற்றனர். அங்கு கூடியிருந்த மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, குழந்தை திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நெஞ்சார விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து சுற்றுலாத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் நேரில் ஆய்வு செய்தனர். முன்னதாக, பரமனந்தல் அத்திப்பட்டு இடையே ரூபாய் பல கோடி மதிப்பீட்டில் ராட்சத வேகத்தில் நடைபெற்று வரும் 38.333 கிலோ மீட்டர் நீள பிரம்மாண்ட சாலை அமைக்கும் பணியினையும் அமைச்சர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடிக்க அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

இவ்விழா மற்றும் ஆய்வின் போது பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை செவ்வனே கவனித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமார், காடுகளின் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள மேலாண்மை குறித்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் காஞ்சனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) மா.சையதுபயாஸ் அஹமத், மாவட்ட சுற்றுலா அலுவலர் (மு.கூ.பொ) வே.கார்த்திக், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா , வட்டாட்சியர் அலுவலக ரேணுகோபால், செந்தில்குமார் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் அனைவரும் திரளாகக் கலந்துகொண்டு விழாவினை மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்தினார்கள். லட்சக்கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து விழாவைக் திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

# காமராஜர் 124வது பிறந்தநாளை முன்னிட்டு மாணவ மாணவிகளுக்கு பாராட்டு விழா

முன்னாள் முதல்வர் கர்மவீரர் காமராஜர் 124வது பிறந்நாள் நிகழ்ச்சியை முன்னிட்டு தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் முன்னாள் துணைத்தலைவர்





மு.சந்தோஷ் ஏற்பாட்டில் திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டிதலைவர்காங்கை குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி பொதுச்செயலாளர் வி.அருணா ச்சலம், செங்குன்றம் நகர காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர்கள் ஜெய பிரகாஷ் (எ) கோபி, ஆர்ஆர்சி. ராஜீவ் காந்தி, நிர்வாகிகள் பி.குபேந்திரன், டாக்டர். ராபர்ட், எஸ்.பயாஸ் உசேன், எஸ்.பாஸ்கரன், கோட்டூர் எஸ். உதயா, ஏ.மணிகண்டன், அஃபர், சாகுல், பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மரக்கன்றுகள் நடுதல், பி.ஆர். அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தல், லஞ்சம் தவிர்..! நெஞ்சம் நிமிர்..!! வாசகம் எழுதிய காமராஜர் புகைப்படம் அரசு அலுவலகத்திற்கு வழங்குதல், கர்மவீரர் காமராஜர் திருவுருவ ப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, பேச்சு ப் போட்டி, ஓவியப்போட்டி போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவர்களுக்கு பாராட்டு, 124 மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள், வடகரை ஊராட்சி ஊழியங்கள், அரசு பள்ளி & கிராம தூய்மை பணியாளயாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மித்ரன் டியூசன் சென்டர் ஆசிரிய ஆசிரியைகள், பொதுமக்கள், மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.



## மாரிக்குப்பத்தில் மக்கள் நலப் பணிகள்:

# சமூக சேவகர் வி.நவீன் குமார் முன்னெடுத்த சேவை முயற்சி பாராட்டு

கோலார் தங்க வயல்: மாரிக்குப்பம் 10வது வார்டில், வெஸ்டர்ன் எஜுகேஷன் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற மக்கள் நலச் சேவை நிகழ்ச்சி பொதுமக்களின் வரவேற்பைப் பெற்றது. பாதுகாப்பு, கல்வி மற்றும் மனிதநேய சேவையை ஒருங்கிணைத்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு சமூக சேவகர் வி. நவீன் குமார் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, அப்பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் புதிய சி.சி. டி.வி. கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்ப ட்டன.

இந்த வசதி மூலம் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு துணை கிடைப்பதுடன், மக்கள் பாதுகாப்பு உணர்வும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த முயற்சியை முன்னெடு த்த சமூக சேவகர் வி. நவீன் குமார், மக்கள் நலன் தொடர்பான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் கல்வியில்முன்னேறவேண்டும் என்பதே இந்த திட்டத்தின் நோக்கம் என வி. நவீன் குமார் தெரிவித்தார்.

இந்த உதவி பெற்ற மாணவர்களும், பெற்றோர்களும் அறக்கட்டளைக்கும், வி. நவீன் குமார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின் மற்றொரு முக்கிய நிகழ்வாக, வயதானோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு பென்ஷன் உதவித் தொகை வழங்கப்பட்டது. சமூகத்தின் பின்தங்கியோருக்கு உதவுவது மனிதநேயத்தின் அடிப்படை என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த உதவித் திட்டம் செயல்படுத்தப் பட்டது. உதவிகளைப் பெற்ற பலர், சமூக சேவகர் வி. நவீன் குமார் மேற்கொண்டு வரும் பணிகள் பல குடும்பங்களுக்கு நம்பிக்கையையும் ஆதரவையும் அளித்து வருவதாக பாராட்டினர்.

இந்த நிகழ்ச்சியில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஹரிஷ் குமார் மற்றும் சப் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி சிறப்பு விருந்தி னர்களாககலந்துகொண்டனர். பொதுமக்களின் பாதுகாப்பு, கல்வி வளர்ச்சி மற்றும் சமூக ஒற்றுமைக்கு தன்னார்வ அமைப்புகளின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்றும், வி. நவீன் குமார் போன்ற சமூக சேவையாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் மற்றவர்களுக்கு ஊக்கமாக அமையும் என்றும் அவர்கள் பாராட்டினர்.

நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு சேவைப் பணிகளை வரவேற்றனர். குறிப்பாக, வெஸ்டர்ன் எஜுகேஷன் அறக்கட்டளை மூலம் வி. நவீன் குமார் தொடர்ந்து மேற்கொண்டு வரும் கல்வி உதவி, பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் நலத்திட்டங்கள் சமூகத்தில் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதாக பலரும் கருத்து தெரிவித்தனர். சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வரும் சமூக சேவகர் வி. நவீன் குமார், மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார். இளைஞர்களை சமூக சேவையில் ஈடுபடுத்துதல், மாணவர்களின் கல்விக்கு உதவுதல், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆதரவாக நிற்றல் போன்ற பணிகள், அவரது சேவையின் முக்கிய அடையாளமாக பொதுமக்களால் குறிப்பிட ப்பட்டன. "மக்கள் நலனே முதன்மை" என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வரும் வி. நவீன் குமார் மற்றும் வெஸ்டர்ன் எஜுகேஷன் அறக்கட்டளை மேற்கொண்டுள்ள இந்த மக்கள் நல முயற்சி, மாரிக்குப்பம் பகுதியில் சமூக அக்கறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இதுபோன்ற சேவைப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும், சமூக சேவகர் வி. நவீன் குமார் போன்றோர் இன்னும் பல சமூக நலத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்பு தெரிவித்தனர்.

# ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு அன்னதானம்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பெரியார் நகர் அருள்மிகு ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் 45ஆம் ஆண்டு ஆடித்திருவிழாவை முன்னிட்டு பெரியார்நகர் இளைஞரணி சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம்வழங்கும்நிகழ்ச்சி பெரியார் நகர் இளைஞரணி நிர்வாகிகள் குணசேகர், சந்தோஷ்குமார், பிரபாகரன், அஜி, பிரவின் குமார், மதன், தனுஷ், பிரவீன், கார்த்திக், மோகன், மதன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.



முன்னதாக அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆலய நிர்வாகிகள் உறுப்பினர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கம்பத்தில் முன்னாள் மாணவர்கள் சார்பில் ரத்ததான முகாம்: தேனி எம்பி தங்க தமிழ்ச்செல்வன் தொடங்கி வைத்தார்

## பத்திரிகை துறை சமுதாயத்திற்கு பயன்தரும் செய்திகளை மட்டுமே வெளியிட வேண்டும்: வலியுறுத்தி கேட்டுக் கொண்ட எம்.பி

தேனி மாவட்டம் கம்பம் சிக்னல் அருகில், இலாஹி பள்ளி முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளை சார்பில் நான்காம் ஆண்டு ரத்ததான முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமிற்கு கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா



நெப்போலியன் தலைமை வகித்தார். இம்முகாமை தேனி நாடாளுமன்ற உறுப்பினர் (எம்பி) தங்க தமிழ்ச்செல்வன் முறைப்படி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், "ஜனநாயகத்தின் நான்காம் தூணாக விளங்கி வரும் பத்திரிக்கை துறையானது, சமுதாயத்திற்கு பயன் தரும் நல்லதொரு செய்திகளை மட்டுமே வெளியிடுவதற்காக பயன்படுத்தப்படவேண்டும்" என்று மிக முக்கியமாக வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். மேலும், ரத்ததானம் போன்ற உன்னதமான மற்றும் நற்பணி சார்ந்த நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பத்திரிகைகள் நேர்மறையான முறையில் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்றும் அவர் தனது உரையில் பிரதானமாக சுட்டிக்காட்டினார். அவரது எழுச்சிமிகு உரையை தொடர்ந்து நடைபெற்ற இந்த முகாமில் 80க்கும் மேற்பட்ட கொடையாளர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு அறக்கட்டளை தலைவர் சையது சுல்தான் இப்ராஹிம், செயலாளர் பக்கீர் மைதீன், பொருளாளர் உதுமான் அலி மற்றும் நிர்வாகிகள் சிராஜுதீன், இப்ராஹிம் ஷா, ஹம்சா முபாரக், ஹக்கீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், இவ்விழாவில் கம்பம் வாவேர் பள்ளிவாசல் ஜமாத் தலைவர் ஜைனுல் ஆபிதீன், துணைதலைவர் அப்துல் சமது, மூத்த வழக்கறிஞர் துரை. நெப்போலியன், இலாஹி ஓரியண்டல் பள்ளி தாளாளர் முகமது ஸயீது ஹனபி, பள்ளி செயலாளர் சலீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இவர்களுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் டெல்லி ஹால் சாகுல் ஹமீது, திமுக மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், கம்பம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் பானுமதி, இரத்த மையத்தின் தலைமை மருத்துவர் பாரதி, மயக்கவியல் மருத்துவர் அழகர்சாமி மற்றும் காமயகவுண்டன் பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவர் சிராஜுதீன் ஆகியோரும் பங்கேற்றனர்.

இவர்களோடு நகர் மன்ற உறுப்பினர்கள் கம்பம் சாதிக் மற்றும் தீன், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் அப்பாஸ் மந்திரி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நகரத் தலைவர் சேட், எஸ்.டி.பி.ஐ நகர தலைவர் சிராஜுதீன் உட்படப் பல முக்கிய பிரமுகர்களும், பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக அறக்கட்டளை துணை தலைவர் சம்சுல் ஹுதா வந்திருந்த அனைவருக்கும் நன்றி உரையாற்றினார்.

## தூத்துக்குடியில் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு

# காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் 2000 பேருக்கு மட்டன் பிரியாணி வழங்கினர்

தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் 2000 பேருக்கு மட்டன் பிரியாணி வழங்கினர்

தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி அண்ணா நகர் 2.வது தெருமெயின் ரோட்டில் காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் தலைவர் முத்துச்செல்வம் நாடார் தலைமையில் செயலாளர் பொன் பாண்டி நாடார், பொருளாளர் தட்சிணாமூர்த்தி நாடார், துணைப் பொருளாளர் மாலதி மசாலா கம்பெனி நிறுவனர் அண்ணாமணி நாடார், தொழிலதிபர் ஆர் எல் ராஜாநாடார் ஆகியோர் முன்னிலையில் பொது மக்களுக்கு மட்டன் பிரியாணி வழங்கினார்,






தூத்துக்குடி காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புக் பேக் ஆகியவை வழங்கிய பின் மதியம் காமராஜர் நற்பணி மன்ற தலைவர் முத்துச்செல்வன் நாடார் தலைமையில் 2000 பொது மக்களுக்கு மட்டன் பிரியாணி, முட்டையுடன் சேர்த்து வழங்கப்பட்ட நிகழ்ச்சி பொதுமக்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றது



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா பூண்டி கிராமத்தில் அருங்காட்டு குளத்தின் அருகிள் உள்ள தனியார் பட்டா நிலத்தில் கட்டி வைத்திருந்த விவசாயி விஸ்வநாதன் தகப்பனார் பெயர் துரைச்சாமி ஆகியோரது மாட்டை 18/6/2026 அன்று இரவு புலி தாக்கி மாடு இறந்துவிட்டது ஆகவே வனத்துறையினர் உடனே அந்த மாட்டை பார்வையிட்டு விவசாயிக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்




திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலராக அ.சிவசுப்பிரமணிய பிள்ளை (19.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் ஜமுனாமரத்தூர் வட்டம், செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற ஜவ்வாது மலை 26வது கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் வைக்கப்பட்ட அரசு நலதிட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

# பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு: கம்பம் எம்.எல்.ஏ. பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா பரிசுகளை வழங்கினார்



தேனி மாவட்டம் கம்பம் தொகுதிக்குட்பட்ட உத்தமபாளையம் கல்வி வட்டாரத்தில் உள்ள அனைத்துபள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாகம்பத்தில் உள்ள யாதவர் மஹாலில், கடந்த 18.07.2026 சனிக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. PLA.ஜெகநாத் மிஸ்ரா MLA., அவர்கள் தலைமை தாங்கி, சாதனை படைத்த மாணவமாணவிகளுக்கு பரிசுகளையும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார். விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவமாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







தமிழக வெற்றிக்கழகத்தின் பொதுச்செயலாளரும், தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சருமான எங்களின் அரசியல் ஆசான் மாண்புமிகு திரு. என். ஆனந்த் அவர்களின் பிறந்தநாளையொட்டி, பழனி சட்டமன்றத் தொகுதி சார்பில், பழனி சண்முக நதி சாலையில் அமைந்துள்ள களம் 94 டர்ஃப் (Kalam 94 Turf) மைதானத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டி உற்சாகமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் மூத்த நிர்வாகி திரு. மகுடீஸ்வரன், ஜே.பி.எஸ். சஞ்சய், திரு. விக்டர், திரு. சிவனப்பன், திரு. நிவாஸ், திரு. ஆஷிக், திரு. சிராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டு போட்டியை சிறப்பித்தனர்.

இப்போட்டி விளையாட்டு திறனை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், இளைஞர்களிடையே ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை வளர்க்கும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.







தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளரும், தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சருமான மாண்புமிகு திரு. என். ஆனந்த் அவர்களின் பிறந்தநாளையொட்டி, பழனி சட்டமன்றத் தொகுதி சார்பில் பழனி ராமகிருஷ்ணா ஹாஸ்டலில் மனநலம் குன்றிய 200 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மகுடீஸ்வரன், ஜே.பி.எஸ். சஞ்சய், ஹரிஹரன், விக்டர், சிவனப்பன் மற்றும் கழகத்தின் பிற நிர்வாகிகள் கலந்துகொண்டு, பயனாளிகளுக்கு உணவு வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர்.



திண்டுக்கல் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.ஜெயக்குமார், இ.கா.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்களின் புகார் மனுக்கள் பெறப்பட்டு அதன் மீது தனி கவனம் செலுத்தப்பட்டுவிரைவில்நடவடிக்கைஎடுக்கப்படும் என உறுதியளித்தார்கள்.



திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார்,இ.கா.ப.,அவர்களின்உத்தரவின் படி வேடசந்தூர் காவல் சரகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு சமூக வலைதளங்களில் முன்பின் தெரியாத நபர்களிடம் நட்புக் கொள்வதை தவிர்ப்பது குறித்தும், போதைப்பொருள்ஒழிப்பு குறித்தும், போக்சோசட்டம் குறித்தும் பெண்கள்,குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண்கள் 181,1098 மற்றும் சிங்கப்பெண் உதவி எண் 1091குறித்தும்எழுத்துக்கூறிவிழிப்புணர்வுஏற்படுத்தி வரும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிபடையினர்

## செங்குன்றம் காவல் மாவட்டம் சார்பில்

# கல்லூரி மாணவிகளிடையே போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி





ஆவடி காவல் ஆணையரக ஆணையர் செந்தில் குமார் உத்தரவின்பேரில் செங்குன்றம் காவல் துணை ஆணையாளர் கே. மகேஸ்வரி, பெண்கள் பாதுகாப்பு, சட்ட விழிப்புணர்வு மற்றும் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து மணலி திருத்தங்கல் நாடார் கல்லூரியின் மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உரையாற்றினார்.

தொடர்ந்து, அவர்களின் முன்னிலையில் கல்லூரி மாணவிகள் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை ஏற்றனர்.

இதனைத் தொடர்ந்து, செங்குன்றம் "சிங்கப் பெண்" சிறப்புப் படையினர், பெண்களின் பாதுகாப்பு, தற்காப்பு முறைகள் மற்றும் அவசரகாலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாணவிகளுக்கு விரிவான விழிப்புணர்வு வழங்கி,தற்காப்புசெயல் விளக்கத்தையும் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் மணலி காவல் நிலைய ஆய்வாளர், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

# குச்சனூர் சுயம்பு சனீஸ்வர பகவான் கோவில் ஆடித் திருவிழா விமரிசையாக துவக்கம்

## மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் நேரில் ஆய்வு செய்து சாமி தரிசனம்







தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள மார்க்கையன்கோட்டையை அடுத்த குச்சனூரில், உலகப் புகழ்பெற்ற சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்தியாவில் சனீஸ்வர பகவானுக்கு என்று தனியாக அமைந்துள்ள மிக முக்கிய முதன்மை தலங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு சனீஸ்வரபகவான் எவ்வித வாகனமும் இன்றி, சுயம்புவாக லிங்க வடிவில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பது இத்தலத்தின் மிக முக்கிய சிறப்பம்சமாகும். பிற கோவில்களில் நின்ற கோலத்திலோ அல்லது அமர்ந்த கோலத்திலோ காட்சியளிக்கும் சனீஸ்வர பகவான், இங்கு கிழக்கு நோக்கி சுயம்பு வடிவில் லிங்க உருவமாக வீற்றிருக்கிறார். பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்காக சனீஸ்வர பகவான் இங்கு வந்து தவம் இருந்து, சுயம்புவாக உருவெடுத்தார் என்ற ஆன்மீக வரலாறும் இக்கோவிலுக்கு உண்டு.

இதனால் ஏழரை சனி, அஷ்டம சனி மற்றும் சனி தோஷங்களால் பாதிக்கப்படுபவர்கள் இக்கோவிலுக்கு வந்து வழிபட்டு சென்றால் தோஷங்கள் நீங்கி நலம் பெறுவர் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது.

இத்தகைய ஆன்மீக பெருமை வாய்ந்த இத்திருக்கோவிலில் இந்த ஆண்டிற்கான ஆடி மாத பெருந்திருவிழா ஜூலை 18 ஆம் தேதி மிக விமரிசையாக துவங்கியது. பொதுவாகவே ஆடி மாதம் என்றாலே தமிழகத்தில் உள்ள ஆன்மீக தலங்களில் பக்தர்களின் வருகை அதிகமாக இருப்பது வழக்கம். அந்த வகையில், ஜீவ நதியான சுரபி நதிக்கரையில் வீற்றிருக்கும் இந்த சனீஸ்வர பகவான் திருக்கோவில் ஆடித் திருவிழாவை முன்னிட்டு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வருகை தந்து கொண்டிருக்கின்றனர். பக்தர்கள் புனிதமிக்க சுரபி நதியில் நீராடி, சனீஸ்வர பகவானை மிக எளிதாக தரிசனம் செய்வதற்கு ஏற்றவாறு பல்வேறு சிறப்பான ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்கு எவ்வித இடையூறும், அசௌகரியங்களும் ஏற்படாத வண்ணம் அனைத்து பாதுகாப்பான மற்றும் அடிப்படை வசதி ஏற்பாடுகள் குறித்து,

மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், அறங்காவலர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுடனும் முன்கூட்டியே விரிவான கலந்தாய்வு கூட்டம் நடத்தி உரிய ஆலோசனைகளை வழங்கியிருந்தார். அதன் பின்னரே இத்திருவிழா முறைப்படி துவங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து அறநிலையத்துறை செயல் அலுவலர் சுபிதா அவர்கள் கூறுகையில்,

பக்தர்கள் எவ்வித இடையூறும் இன்றி சாமி தரிசனம் செய்ய ஏதுவாக பல்வேறு கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். க்ஷகுறிப்பாக, தூய்மையை பேணும் வகையில் நடமாடும் கழிவறைகள், பெண்கள் உடைமாற்றும் அறைகள்,

மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் எளிய முறையில் சாமி தரிசனம் செய்ய ஏதுவாக சக்கர நாற்காலி வசதிகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

மேலும், கோடை வெயிலின் தாக்கம் பக்தர்களை பாதிக்காத வண்ணம், அவர்கள் நடந்து செல்லும் பாதைகள் முழுவதும் வெயில் தடுப்பு தரை விரிப்புகள் விரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து, கோவிலின் அறங்காவலர் தீபன் அவர்கள் கூறுகையில், இந்த ஆண்டு திருவிழாவிற்கு வருகை தரும்பக்தர்களின்தேவைகளை அறிந்து, அவர்கள் எதிர்பார்க்கும் அனைத்து வசதிகளையும் எவ்வித தொய்வும் இன்றி மிகத் திறம்பட செய்துள்ளோம் என்று உறுதியளித்தார்.

இத்திருவிழா முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், சனீஸ்வர பகவானை சுவாமி தரிசனம் செய்வதற்காக மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் அவர்கள் திருக்கோவிலுக்கு வருகை புரிந்தார்.க்ஷ அப்போது பேரூராட்சி சேர்மன் பி.டி.ரவிச்சந்திரன் அவர்கள் ஆட்சியரை பூங்கொத்து கொடுத்து சிறப்பான முறையில் வரவேற்றார்.

அதனை தொடர்ந்து, கோவில் நிர்வாகத்தின் சார்பாக ஆட்சியருக்கு மாலை அணிவித்து உரிய மரியாதை செய்யப்பட்டது. சுவாமி தரிசனம் செய்ய வந்த மாவட்ட ஆட்சியர், அங்கு அமைக்கப்பட்டுள்ள முதலுதவி மருத்துவ முகாம்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, அவசரக் காலத்திற்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தயார் நிலையில் உள்ளார்களா என்பது குறித்தும், காவல் துறையினரின் பாதுகாப்பு அறையின் செயல்பாடுகள் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடு குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து தெளிவுபடுத்தி கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, வெயிலில் சாமி தரிசனம் செய்ய நீண்ட வரிசையில் காத்திருக்கும் பக்தர்களின் தாகத்தை தணிக்கும் பொருட்டு, ஆங்காங்கே தண்ணீர் மற்றும் நீர்மோர் பந்தல்கள் அமைக்கப்பட்டு, தூய்மையான நீர்மோர் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குழுவினர் எவ்வித அவசர நிலையை சமாளிக்கவும் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து காவல் துறையினர் நகருக்குள் வாகன நெரிசல் ஏற்படாத வண்ணம் தங்களது போக்குவரத்து ஒழுங்கு முறை பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். ஒட்டுமொத்தமாக, மாவட்ட நிர்வாகம், அறநிலையத் துறை மற்றும் காவல் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் குச்சனூர் ஆடித் திருவிழா பக்தர்களின் பெரும் வரவேற்போடு எவ்வித இடையூறுமின்றி மிகச் சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற்று வருகிறது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி ராமர் கோயில் தெருவில் கிளினிக் நடத்தியபோலிமருத்துவர் அனுப் குமார் கைது செய்யப்பட்டுள்ளனர்

# செய்யாறில் காமராஜர் பிறந்தநாள் விழா: திமுகவை மறைமுகமாக விமர்சித்த காங்கிரஸ் எம்.பி. விஷ்ணு பிரசாத்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில், கர்மவீரர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் அன்னதானம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் நிர்வாகிகள் முத்து, வேலு, சந்துரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கடலூர் மக்களவை உறுப்பினரும், செய்யாறு பகுதியைச் சேர்ந்தவருமான விஷ்ணு பிரசாத் கலந்து கொண்டு மரக்கன்றுகள் மற்றும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை பொது மக்களுக்கு வழங்கினார். மரக்கன்றுகளை பெற பொதுமக்கள் ஆர்வமுடன் திரண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானமும்




வழங்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விஷ்ணு பிரசாத், "ஆணவமும் அகங்காரமும் எந்த அரசியல் சக்தியையும் நிலைநிறுத்தாது. கடந்த ஆட்சியில் அதிகார மமதையில் செயல்பட்டவர்கள் இன்று மக்களிடமிருந்து விலகியுள்ளனர். வெற்றி பெற்றிருந்தால் பதவிக்காக அலைந்திருப்பார்கள்; இன்று ஜி.பி.எஸ். வைத்து தேடும் நிலைக்கு சென்றுள்ளனர்" என்று கூறினார். அவரது இந்த கருத்து, முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட திமுக தலைவர்களை மறைமுகமாக விமர்சிப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

மேலும், தற்போதைய தமிழக அரசு நிதி ஒழுங்கை மேம்படுத்தி மாநிலத்தை தன்னிறைவு நோக்கில் கொண்டு செல்லும் என்றும், சட்டம்ஒழுங்கு தொடர்பாக எழும் சவால்களை அரசு திறம்பட கையாள்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## ரூ.10.15 கோடியில் நவீன ஹாக்கி மைதானம் திறப்பு:

# திருவண்ணாமலையில் விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்திய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூ.10.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன செயற்கை இழை ஹாக்கி (வளைகோல் பந்து) விளையாட்டு மைதானத்தை பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் மற்றும் போளூர் சட்ட மன்ற உறுப்பினர் ஆர். அபிஷேக் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன மைதானத்தை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், மாவட்ட விளையாட்டு விடுதியில்



பயிற்சி பெறும் மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் பயிற்சி மற்றும் வசதிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், மாணவிகளுடன் இணைந்து காலை உணவருந்தி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட செயற்கை இழை ஹாக்கி மைதானத்தில் நடைபெற்ற தொடக்கப் போட்டிகளை அமைச்சர் தொடங்கி வைத்து, வீரர், வீராங்கனைகளின் ஆட்டத்தை பார்வையிட்டு பாராட்டினார்.

இந்த புதிய ஹாக்கி மைதானம், திருவண்ணாமலை மாவட்டத்தில் விளையாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான வீரர், வீராங்கனைகளை உருவாக்கும் வகையில் முக்கிய பங்காற்றும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மண்டல முதுநிலை மேலாளர் சாந்தி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சண்முகப்பிரியா உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## ஜவ்வாது மலை 26வது கோடை விழா கோலாகல நிறைவு:

# ரூ.111.25 கோடி நலத்திட்ட உதவிகள்; 27,532 பயனாளிகளுக்கு வழங்கல்

திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர் வட்டம், செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் ஜவ்வாது மலை 26வது கோடை விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, ஜவ்வாது மலை 26வது கோடை விழா நேற்று பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டு, இன்று நிறைவு நாள் வரை சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை எழில் சூழ்ந்த ஜவ்வாது மலையின் மலைவாழ் மக்களின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வாழ்வியலைப் பறைசாற்றும் வகையில் இக்கோடை விழா நடத்தப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய இவ்விழாவில் கலை பண்பாட்டுத் துறை, பள்ளிக்கல்வித் துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் இயல், இசை, நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றன.

மேலும், 18 அரசு துறைகளின் 65 நலத்திட்டங்கள் மூலம் ரூ.111 கோடி 25 லட்சம் மதிப்பில் 27,532 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 6 துறைகளின் சார்பில் ரூ.65.66 கோடி மதிப்பில் முடிவுற்ற 128 திட்டப் பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

26 அரசு துறைகளின் சார்பில் 37 பல்துறை பணிவிளக்க கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த இரு நாள் கோடை விழாவில் திரளாக பங்கேற்ற பொது மக்களுக்கும், விழா சிறப்பாக நடைபெற உழைத்த அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் நடைபெற்ற கயிறு இழுத்தல், மினி மாரத்தான், கபடி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கலைபண்பாட்டுத் துறை, சுற்றுலாத்துறை மற்றும் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற இயல், இசை, நாடகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேலும், அரசு துறைகள் சார்பில் அமைக்கப்பட்ட பல்துறை பணிவிளக்க கண்காட்சி அரங்குகளில் சிறப்பாக செயல்பட்ட முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் காஞ்சனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) மா. சையதுபயாஸ் அஹமத், செயற்பொறியாளர் இளங்கோ, ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா, மாவட்ட சுற்றுலா அலுவலர் வே. கார்த்திக், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரேணுகோபால், செந்தில்குமார் உள்ளிட்ட பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகரில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர் ஆலமரம் அருகே தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் மகளிர் அணி அலுவலகம் திறப்பு விழா, பொதுமக்கள் தூய்மைக் காவலர்களுக்கு அரிசி, புத்தாடை உட்பட அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா மகளிரணி மாவட்ட அமைப்பாளர் ஷாலினிமகேஷ் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் டிசிளம்.



மனோஜ் முன்னிலை வகித்தார்.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளருமான. எம்.எல். விஜய்பிரபு தலைமை தாங்கி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றிவைத்து பொதுமக்கள் தூங்மைக் காவலர்களுக்கு அரிசி, புத்தாடை மற்றும் இனிப்புடன் அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். இந்நிகழ்வில் ஊராட்சி செயலாளர் சுரேஷ், வினோத், சதீஷ் உள்ளிட்ட தவெக ஒன்றிய செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



தேனி தெற்கு மாவட்ட இந்துமுன்னணி பேரியக்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் கூடலூர் நகரில் K.S.மஹாலில் மதுரை கோட்ட செயலாளர் கோம்பை. கணேசன் தலைமையிலும், மாவட்ட தலைவர் V.சுந்தர் முன்னிலையிலும் நடைபெற்றது.நகர துணைதலைவர் பிரசாந்த் வரவேற்புறையாற்றினர்.மாநில பொதுச்செயலாளர் நா.முருகானந்தம் ஜி சிறப்புறையாற்றினர். மாவட்ட பொதுச்செயலாளர் R.பாலமுருகன், மாவட்ட செயலாளர்கள் ஆச்சி.கார்த்திக்,மாய. லோகநாதன், கணேஷ்குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரெங்கசாமி ,நகர துணைதலைவர் ஸ்டீபன்,நகர செயலாளர் சுரேஷ் மற்றும் நகர, ஒன்றிய பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். நகர செயலாளர் சந்தோஷ் நன்றியுறையாற்றினர்செயற்குழு ஏற்பாட்டினை நகர பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தினர்.செயற்குழு கூட்டத்தில் வருகின்ற ஜூலை 26 தேதி போடியில் நடைபெறும் ஆர்பாட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்களை கலந்துகொள்ள வைக்கவேண்டும்எனமுடிவுசெய்யபட்டது.கூட்டத்தில்பொறுப்பாளர்கள்80பேர்கலந்துகொண்டனர்.

# சோழவரம் அருகே போதை மாத்திரை விற்பனை செய்த 4 பேர் கைது

செங்குன்றம் போலீஸ் துணை ஆணையர் மகேஸ்வரி உத்தரவின் பேரில் தனிப்படை பிரிவு ஆய்வாளர் ஆனந்த் தலைமையில் சோழவரம் பைபாஸ் சாலையில் உள்ள பிரபல தனியார் ஹோட்டல் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் வந்த இளைஞர் ஒருவரை பிடித்து சோதனை செய்தபோது மோட்டார் சைக்கிளில் முன்பக்கத்தில் உள்ள பையில்



இருந்த போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து சோழவரம் காவல் நிலையம் அழைத்து வந்து தீவிரமாக விசாரணை செய்ததில் நாரவாரிகுப்பம் சி. கே.மாணிக்கனார் தெருவை சிவாஜி(வயது) 31 என தெரிய வந்தது.

மேலும் இவரிடம் இந்த போதை மாத்திரைகள் எங்கிருந்து வாங்கி வந்தீர்கள் யாருக்கு எடுத்துச் செல்கிறது என்று பல்வேறு கோணங்களில் விசாரணை செய்ததில் நாரவாரிகுப்பம் சி.கே.மாணிக்கனார் தெருவை சேர்ந்த பாரதி 27, செங்குன்றம் அடுத்த மொண்டி அம்மன் நகர் சேர்ந்தவர் சக்தி (வயது 22), சோழவரம் அடுத்த அத்திப்பேடு பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் செல்வகுமார் (வயது 20) இவர்கள்தான் கொடுத்து அனுப்பினார்கள் என்று தெரிவித்ததின் பேரில் மேலும் 4 பேரையும் கைது செய்து சோழவரம் போலீசார் வழக்கு பதிவு செய்து1170 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# பாடியநல்லூர் மொண்டியம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழா ; 2000 பேருக்கு அன்னதானம்

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மொண்டியம்மன் கோயில் 63ஆம் ஆண்டு ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு மொண்டியம்மன் நற்பணி மன்றம் சார்பில் 5ஆம்ஆண்டு சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சிஆலய அன்னதான திடலில் வெகு சிறப்பாக



நடைபெற்றது.

நிகழ்ச்சியில்அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் என்னும்சமபந்திவிருந்து வழங்கப்பட்டது. இதில் ஆலய நிர்வாகிகள் உறுப்பினர்கள், மொண்டியம்மன் நற்பணி மன்றத்தின் நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA